கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோயிலூர் நகராட்சி, அங்கவை சங்கவை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி விலையில்லா மிதிவண்டியை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். மாவட்ட ஆட்சியர் சரவண்குமார், மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா, மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், நகரச் செயலாளர் கோபி. கிருஷ்ணன், ஒன்றியச் செயலாளர்கள் ஜி. இரவிச்சந்திரன், அ,சா.ஏ. பிரபு, பேருராட்சி மன்றத் தலைவர் ராயல் அன்பு, துணைத் தலைவர் குணா உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அறந்தாங்கி கூத்தாடிவயல் பகுதியில் நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில செயலாளரும் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினருமான தயாநிதி மாறன் பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்வுகளில், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஞான.இளங்கோ, ஜெ.அபுதாஹீர், உதயம் எஸ்.சண்முகம், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே.கலைமணி, ஒன்றிய நகரக் கழகச் செயலாளர்கள்.க.இராஜேந்திரன், எஸ்.எம்.அப்துல்லா, வே. பொன்துரை, பொன்.கணேசன், எல்.குமார், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் இரா.ஆனந்த், அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், தி.முத்து, மாவட்ட அணி அமைப்பாளர்கள் த.மணிராஜன், ஆ.கலைச்செல்வன், ஹரி.விமலாதிராஜன், பாத்திமா பீவி, மு.கருணாகரன், சிவ.பால.இளங்கோ, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச்செயலாளர்கள் வே.நம்பி, சுரேஷ் ஜெ.மனோகர், ஏ.வி.ஆர்.கோபால்ராம், வாசிம் ராஜா, வே.கௌதமன் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கோ.சக்திவேல், துணை அமைப்பாளர்கள் கே.சதீஸ்குமார், எஸ்.வி.சரவணன், ஆ.சாமிநாதன், ஜி.பி.ஜி.வேணு, ஆர்.அடைக்கலராஜா, அ.ஷாஜகான், ர. ராஜ பாண்டியன், சி.சந்திரன் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

மாவட்ட அளவிலான வாலிபால் சாம்பியன் போட்டி!

வெற்றி பெற்ற அணிக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் பரிசுகள் வழங்கினார்!

அரியலூர், செப், 27-

அரியலூர் மாவட்ட தி.மு.க விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் அரியலூர் மாவட்ட கையுந்து பந்து கழகம் இணைந்து மாவட்ட அளவிலான வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டி அரியலூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்து கொண்டு வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசு தொகையும் மற்றும் வெற்றிக் கோப்பையும் வழங்கி பாராட்டினார்கள்.

இப்போட்டியில் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 38 அணிகள் பங்கு பெற்றது.

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு ரூபாய் 10,100 கொடுக்கூர் கோபி பிரதர்ஸ் அணியும், இரண்டாம் பரிசு ரூபாய்,8,100 இடையாக்குறிச்சியை சேர்ந்த எப்.சி. அணியும், மூன்றாம் பரிசு ரூபாய் 6,100 வளவெட்டி குப்பத்தை சேர்ந்த புரட்சி புயல் அணியும், நான்காம் பரிசு ரூபாய் 4,100 அரியலூர் சிமெண்ட் சிட்டி அணியினர் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய செயலாளர்கள் இரா.கென்னடி, வா.சௌந்தரராஜன், கோ.அறிவழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, மா.அன்பழகன், வி.எழில் மாறன், நகரக் கழகச் செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், நகர் மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எல்.கே.அருண் ராஜா,

மாவட்ட கையுந்து கழக பொறுப்பாளர்கள் ஆர்.பூமிநாதன், டி.பொன்மணி, வி. கோவிந்தசாமி, சி.வில்லாளன், இ.ரமேஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.வேல்முருகன், பி.மாரிமுத்து, என்.கார்த்திகைகுமரன், இ.செந்தில், எம்.கதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய நகரக் கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மாநகராட்சி கழக மாமன்ற உறுப்பினர்கள்

மக்கள் குறைகளைக் கேட்க வேண்டும்! ஆய்வுக்குச் செல்ல வேண்டும்; மண்டலக்குழுத் தலைவர்கள் துறை சார்ந்த அதிகாரிகளுடன் ஆய்வு நடத்துவீர்!

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர், மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, செப்.27-

சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றி னார்.

அப்போது மாமன்ற உறுப்பினர்களுக்கும், மண்டலக்குழுத் தலைவர்களுக்கும் அறிவுரைகளும், வேண்டு கோள்களும் வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம் 25.09.2023 திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் அன்று சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி.மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப. ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகுமார், மற்றும் பரிதிஇளம்சுருதி, கவிஞர்.நன்மாறன், என். பி.எம்.ஷேக்அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள் தேவ ஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், இசட்.ஆசாத், பகுதிக் கழக செயலாளர்கள் செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. ராஜ கோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு, வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள். கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி. ஜே.துளசிங்கம், பி.உதய சங்கர், சரிதா மகேஷ்குமார், பி.ரமேஷ் (எ) நீலகண்டன், எம்.இப்ராஹிம் கனி இரா. கலைச்செல்வி, டாக்டர். ஏ. பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் டி. லோகேஷ், வானவில் விஜய், நா.துலுக்காணம், விஜய், எல். பி.எப்.மோகன், எம்.பிரோஸ்கான், பி.விஜய்குமார், எம். விநாயகம், துரைக்கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ராஜாமுகம்மது, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், எல்.சம்பத்குமார், பிரதீப் குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர். ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ர மூர்த்தி நன்றி கூறினார்.

துறைமுகம் மேற்கு பகுதி துணைச் செயலாளரும் 59-வது வார்டு மாமன்ற உறுப்பினருமான கே.சரஸ்வதி அவர்களின் மறைவிற்கும், திரு. வி.க.நகர் தெற்கு பகுதி 75 'அ' வட்டக் கழகத்தை சார்ந்த மாவட்ட பிரதிநிதி ந.ராஜேந்திரன் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தும் அவர்களை இழந்து வாடும் அவர்களது குடும்பத் தினருக்கு ஆறுதல் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றியது.

"சொன்னதை செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்" என்ற தாரக மந்திரத்திற்கேற்ப 2021 சட்டமன்ற தேர்தலில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியான குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 உரிமைத் தொகை தருவோம் என்றதன் அடிப்படையில்.. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை உருவாக்கி, அத்திட்டம் 15 செப்டம்பர் 2023 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் நிறைவேற்றி, ஒரு கோடியே ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் பெண்களுக்கு அவரவர் வங்கி கணக்கில் ரூபாய் 1000 கிடைக்கச் செய்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய கழகத் தலைவரை மனமார பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

குடும்ப உறுப்பினர்கள் மூளைச்சாவு நிலையை அடைந்த துயரச் சூழலிலும் அவர்களின் உடல் உறுப்புகளை தானமாக அளித்திட்ட குடும்பங்களின் தன்னலமற்ற தியாகத்தினால் பல நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு வாழ்வளித்த அவர்களின் செயலை, தியாகத்தை போற்றிடும் வகையில் இறக்கும் முன் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச்சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மனமார பாராட்டி வணங்கி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய ஜனநாயக வழியில் பகுத்தறிவு செயல்பாட்டில் பயணித்து பல போராட்டங்கள், நெருக்கடிகள், சிறைவாசங்கள், தியாகங்கள், மிரட்டல்கள், பெரும் வெற்றிகள், படுதோல்விகள் எனக் கண்டு பவள விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பெருமைமிகு இயக்கமாம் நம் இயக்கத்தின் தலைவர் வேலூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் விடுத்த அறைகூவலின்படி ஒன்றியத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட INDIA கூட்டணியின் வெற்றிக்கு முழுமூச்சுடன் செயல்பட முடிவெடுத்தும். மாவட்டக் கழகம் அறிவிக்கும் கலைஞர் நூற்றாண்டு விழா இரண்டாம் கட்ட நிகழ்ச்சிகளை எழுச்சியோடு கொண்டாட உறுதியேற்றும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தத்தம் பகுதிகளில் மக்களிடம் சென்று அவர்களிடம் குறைகளைக் கேட்டறிந்து அதனை நிறைவேற்ற உரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டு விரைந்து முடிக்க துணை நிற்க வேண்டும். நடைபெறும் பணிகளை அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு விரைவுபடுத்த வேண்டும். மேலும் மண்டலக் குழுத் தலைவர்களும், துறை சார்ந்த அதிகாரிகளும் இணைந்து மாநகராட்சி சார்பில் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்து விபரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க.மருத்துவ அணி சார்பில் கொளக்காநத்தம் ஊராட்சியில் மாபெரும் ஒருங்கிணைந்த இலவச மருத்துவ முகாமை ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி துவக்கி வைத்தார்.

திருவேற்காட்டில் திட்டப் பணிகள் துவக்கம்!

திருவள்ளூர், செப். 27–

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள அயனம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ரூபாய் 2.11 கோடி மதிப்பீட்டில் 10 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்காக பணி துவக்க விழா நடைபெற்றது இந் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்

அருகில் நகர மன்றத் தலைவரும் நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பார்த்தசாரதி, நிர்வாகிகள் கவுன்சிலர்கள் ஏ.ஜெ.பவுல், தெய்வசிகாமணி, ஜெ. சரவணன், நடராஜ், பிரதானம், கே.பி. எஸ்.சுதாகர், பிரியாகுமார், மா.விநாயகம், ஜேக்கப், என்.ராஜி, ஜி.பாபு, நரேஷ் குமார், பெற்றோர் ஆசிரியர் கழக செயலாளர் பரந்தாமன், தலைமை ஆசிரியர் அனிதா, உதவி தலைமை ஆசிரியர் எஸ்.செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமை! மயிலாடுதுறை மாவட்டம் -

பூம்புகாரில் கலைஞர் நூற்றாண்டு மாபெரும் கவியரங்கம் - பட்டிமன்றம்!

திருச்சி என்.சிவா – சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

நாகை. செப்.27-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் கவியரங்கம் மற்றும் பட்டிமன்றம் இன்று (26ம் தேதி) மாலை 6.00 மணிக்கு பூம்புகார் கொற்றவை பந்தலில் நடைபெறுகிறது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்குகிறார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ரவி, ஒன்றியக் குழு தலைவர் கமல ஜோதிதேவேந்திரன், சீர்காழி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஜி. ஜே.பிரபாகரன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பொதுக் குழு உறுப்பினர் சுபா நெடுஞ்செழியன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் காளி.தேசப்பன், மாவட்ட மீனவர் அணி துணை தலைவர் பி.மாரிமுத்து, ஊராட்சி மன்ற தலைவர் என்.சசிக்குமார், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் வேல்சாமி, மாவட்ட இலக்கிய அணி துணைத்தலைவர் மா.இராசாங்கம், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் என்.தங்கவேல், எபி.அங்குதன், நா.செ.இளமுருகுசலவன், பு.இரவிச்சந்திரன்,

ஆர். உதயசங்கர், அரிகிருஷ்ணன், ஜெ.நடராஜன், மாணிக்கம் எஸ்.ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.ஜுபையர்அகமது, ஒன்றிய அவைத்தலைவர் எம். என்.ஆர்.நெடுஞ்செழியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் எஸ்.சுதாகர், க. ரவிச்சந்திரன், உதயராணி, ஒன்றிய பொருளாளர் மா. தமிழரசன், மாவட்ட பிரதிநிதிகள் எம்.ஆர்.கணேசன், வை.துரைராஜன், கோபி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா. முருகப்பா வரவேற்கிறார்.

சீர்காழி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பஞ்சுகுமார் தொடக்க உரையாற்றுகிறார்.

கவியரங்கம், பட்டிமன்றத்தையும் கழக கொள்கை பரப்புச் செயலாளர், மாநிலங்களவைக்குழு தலைவர் திருச்சி சிவா தொடங்கி வைத்து பேசுகிறார்.

அதைத் தொடர்ந்து நடைபெறும் கவியரங்கத்திற்கு 'தமிழின் தவமகன் கலைஞர்' என்ற தலைப்பில் கவிதைப்பித்தன் தலைமையில் நடைபெறும் கவியரங்கத்தில் ஆண்டாள்பிரியதர்ஷினி, தஞ்சைஇனியன், வீ.ம.இளங்கோவன், கொற்கைமுத்து, மேட்டூர்வைரமணி ஆகியோர் பேசுகிறார்கள். அதைத் தொடர்நது காலங்களை கடந்து கலைஞர் வாழ்வதற்கு பெரிதும் காரணம் இலக்கிய பணியே, அரசியல் பணியே என்ற பட்டிமன்றம் நடைபெறுகிறது. நடுவராக தலைமை அரசு கொறடா கோவி. செழியன் எம்.எல்.ஏ. வும், 'இலக்கிய பணியே' என்ற தலைப்பில் புதுக்கோட்டை விஜயா, கரூர்முருளி, சைதைசாதிக், 'அரசியல் பணியே' என்ற தலைப்பில் நெல்லிக்குப்பம் புகழேந்தி, ஈரோடு இறைவன், கலைமணிபாரதி ஆகியோர் பேசுகிறார்கள்.

விழாவில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், ஏ.சி.என்.சிவபாலன், மூர்த்தி, எம்.எம்.சித்திக், மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர் மு. ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர்.

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கொள்ளிடம் மேற்கு செல்ல.சேதுரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர்விழிதிருமாவளவன், மயிலாடுதுறை வடக்கு என். இளையபெருமாள், மயிலாடுதுறை மத்தியம் ஞான. இமையநாதன், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, மயிலாடுதுறை மேற்கு மூவலூர் மூர்த்தி, செம்பனார்கோயில் வடக்கு பி.எம். அன்பழகன், செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த. விஜயகுமார், குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், குத்தாலம் வடக்கு கு.வைத்தியநாதன், குத்தாலம் மேற்கு ஏ.ஆர்.ராஜா, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ்,

தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பேரூர் கழகச் செயலாளர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எம்.அன்புச்செழியன், குத்தாலம் எம். சம்சுதீன், தரங்கம்பாடி முத்துராஜா, மணல்மேடு அண்ணாதுரை மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்க்காபரமேஸ்வரி, மற்றும் ஒன்றியக் குழு தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொள்கின்றனர்.

சோலை தமிழினியனின் நூல்கள் அறிமுகம் -

'இலக்கியச் சோலை' திங்களிதழ் 14ஆம் ஆண்டு விழா!

ஆண்டு மலரினை மாம்பலம் ஆ.சந்திரசேகர் வெளியிடுகிறார்!

சென்னை, செப். 27 -

இலக்கியச் சோலை திங்களிதழ் 14ஆம் ஆண்டு விழா - 'இலக்கியச் சோலை' 14ஆம் ஆண்டு மலர் வெளியீடு மற்றும் நூல்கள் அறிமுகம் - 'இலக்கியச் சோலை'யின் புரவலர் / வாழ்நாள் உறுப்பினர்களுக்கு (2022-23) 'இலக்கியச் சோலையின் இமயம்' விருது வழங்கல் - புதிய ஆசிரியர் குழுவினர் பதவியேற்பு - வாசகர்களுக்கு பரிசளிப்பு மற்றும் வாழ்த்தரங்கம் - அனைவரும் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு கவியரங்கம் - சிறப்பு சிந்தனைப் பட்டிமன்றம் நிகழ்ச்சிகள் நாளை (28.9.2023 - வியாழக்கிழமை) மாலை 3.30 மணி முதல் 7.30 வரை (ICSA Centre) இக்சா மையம் (ஜீவன ஜோதி ஐ.டி.ஐ.) 107, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600 008. (கன்னிமாரா நூலகம் மற்றும் மியூசியம் எதிரில்) எனும் முகவரியில் நடைபெறுகிறது.

மாலை 6.05 மணிக்கு 'இலக்கியச் சோலை' திங்களிதழின் 14ஆம் ஆண்டு மலரினை இலக்கியப் புரவலர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் வெளியிடுகிறார்.

முதற்பிரதியினை கவிச்சுடர் டாக்டர் கார்முகிலோன் முனைவர் ஜி.ஐயப்பன் ஆகியோர் பெறுகின்றனர்.

மாலை 6.30 மணிக்கு சோலை தமிழினியன் எழுதிய 'அந்திமழை' கவிதை நூலினை அறிமுகம் செய்து பட்டிமன்றத்தில் பங்கேற்றவர்களுக்கு நினைவுப் பரிசுகளை திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் முத்துலிங்கம் வழங்குகிறார்.

நூலின் முதற்பிரதியினை தண்டமிழ்க் கவிஞர் தங்கராசா, வழக்கறிஞர் வி.தங்கமணி ஆகியோர் பெறுகின்றனர்.

மாலை 7.00 மணிக்கு சோலை தமிழினியன் எழுதிய 'நுழைவாயில்' நூலினை அறிமுகம் செய்து கவியரங்கில் கலந்துகொண்டோருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை திரைப்பட இயக்குநர் கலைமாமணி எஸ்.பி. முத்துராமன் வழங்குகிறார்.

நூலின் முதற்பிரதியினை இலக்கிய மாமணி ரூஸ்வெல்ட் வி.கே.கே. குமார் ஆகியோர் பெறுகின்றனர்.

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியத்தில் ரூ790.40 லட்சம் மதிப்பீட்டில் வெட்டாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணிகளுக்கு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.